**கிராமின் கிருஷி மவுசம் சேவா**
இந்திய வானிலை துறை
தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்
கோவை, தமிழ்நாடு

# அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 02-01-2024**

**புதுக்கோட்டை(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2024-01-02 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)**

| வானிலை காரணி | 2024-01-03 | 2024-01-04 | 2024-01-05 | 2024-01-06 | 2024-01-07 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ ) | 2.0 | 2.0 | 2.0 | 3.0 | 12.0 |
| அதிக பட்ச வெப்பநிலை ( oசெ ) | 32.0 | 33.0 | 33.0 | 33.0 | 32.0 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (o செ ) | 22.0 | 21.0 | 22.0 | 22.0 | 21.0 |
| அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 90 | 90 | 90 | 90 | 90 |
| குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 60 | 60 | 60 | 60 | 70 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி ) | 14 | 16 | 14 | 16 | 14 |
| காற்றின் திசை (கோணம்) | 50 | 50 | 50 | 20 | 50 |
| மேக மூட்டம் (ஆக்டா) | 4 | 5 | 3 | 4 | 8 |

## வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

வரும் ஜனவரி முதல் வாரத்தில் இலேசானது முதல் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்ப நிலை 32.0°C - 33.0°C எனும் வேறுபாட்டிலும், குறைந்தபட்ச வெப்ப நிலை 21.0°C - 22.0°C. வேறுபாட்டிலும் இருக்கும். வானம் அடுத்த ஐந்து நாட்களுக்கு பொதுவான மேகமூட்டத்துடன் காணப்படும். காற்றின் வேகம் மணிக்கு 14 - 16 கிலோமீட்டர் வேகம் இருக்கும் என எதிர்பார்க்கலாம்.

## பொது ஆலோசனை:

இளம் வளரும் புற்கள் கறவை மாடு உண்ணும் போது பாலின் கொழுப்பு சத்து குறைய வாய்ப்புள்ளது . இதை தவிர்க்க நார்ச்சத்து நிறைந்த வைக்கோல் ,சோளம் ,கம்பு ,ராகி தட்டைகள் மற்றும் பருத்தி கொட்டை புண்ணாக்கு ஆகியவற்றை தீவனமாக கொடுக்கலாம்.

## குறுஞ்செய்தி :

தென்னையில் மகரந்த சேர்க்கை அதிகரிக்க எக்டருக்கு 15 தேனீப் பெட்டிகள் அமைக்கவேண்டும்.

## பயிர் குறிப்பிட்ட ஆலோசனை:

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| நெல் | சம்பா நெல் அறுவடைக்கு பிறகு தாவரக் கழிவுகளை எரிக்காமல் வயலில் இருந்து அப்புறப்படுத்தி வீணாக்கமால் மறுசுழற்சி செய்து |

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| | அவற்றை மடக்கி உழுவதால் அங்க சத்துதின் அளவு அதிகரித்து மண்ணின் நீர் பிடிப்பு திறன் அதிகரிக்கும். |
| உளுந்து | தற்போது நிலவும் பருவ சூழ்நிலையில் தொடர் மேகமூட்டம் மற்றும் அதிக பனிமூட்டம் காரணமாக உளுந்து பயிரில் சாம்பல் நோய் காணப்படுகிறது . அறிகுறிகளாக இலைகளில் வெள்ளை நிற பொடி திட்டுக்கள் தோன்றும். மற்ற பச்சை நிற பகுதிகள் மங்கிய நிறமாக மாறும். இந்த திட்டுக்கள் அதிகமாகி, கீழ்ப்பகுதியிலும் பரவும். நோயின் தாக்குதல் அதிகமாகும் போது, இலைப் பரப்பு முழுவதும் மஞ்சள் நிறமாக மாறி, வளர்ச்சி அடைவதற்கு முன்பே உதிர்ந்து விடும். இதனை கட்டுப்படுத்த ஏக்கருக்கு 100 கிராம் கார்பன்டசிம் அல்லது நனையும் கந்தகத்துள் காலை அல்லது மாலை வேளையில் தெளிக்கவும். |

## தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை:

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| வெண்டை/ லேடிஸின் விரல் | தற்போது நிலவும் தட்பவெப்ப சூழ்நிலையில் வெண்டை பயிரைத் தாக்கும் இலைச்சுருட்டுப்புழு பரவலாக தென்பட வாய்ப்பு உள்ளது . சேதத்தின் அறிகுறிகளாக இலைகள் புழுவின் உமிழ்நீரினால் நூலினால் சுருட்ட பட்டிருக்கும்அதற்குள் புழு இருந்து கொண்டு பச்சையத்தை சுரண்டித் தின்னும் செடியில் உள்ள இலைகள் அனைத்தும் உதிர்ந்தது போல் தோற்றமளிக்கும். இதனை கட்டுப்படுத்த சுருண்டு இருக்கும் இலைகளை சேகரித்து அழிக்கவும். ஒரு லிட்டர் தண்ணீரில் 2 மி.லி ஃபோசலோன் கலந்து தெளிக்கவும். |
| தென்னை | அனைத்து பருவம் நிலவும் வானிலை நிலையில் ருக்கோஸ் ஸ்பைரலிங் வெள்ளை ஈ கவனிக்கப்டுகிறது. என்கார்சியா ஒட்டுண்ணியின் எண்ணிக்கை அதிகரிப்பதற்காக நீர் மைதா கரைசலை தெளிக்கவும் . மஞ்சள் கவர்சசி பொறிவைக்கும். |

## உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை:

| உயிருள்ள விலங்குகள் | உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| பசு | அதிகாலை நேரத்தில் சில இடங்களில் லேசான பனி மூட்டம் காணப்படுவதால் ஆடுகளை அவ்வேளையில் மேய்ச்சலுக்கு அனுப்பக்கூடாது. காலையில் 8 மணிக்கு மேல் அனுப்ப வேண்டும். |
| பசு | பருவகால முன்னெச்சரிக்கையாக கோமாரி நோய் போன்ற நோய்களுக்கு தடுப்பூசி நடவடிக்கைகளை மேற்கொள்ளவும். |